## திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் அய்யா அவர்களின் 93 வது பிறந்த நாள் விழா:

# கருப்புச் சட்டைப் பட்டாளமும், கலைஞரின் உடன்பிறப்புகளும் இருக்கிற வரை பாசிஸ்ட்டுகளால் தமிழ்நாட்டைத் தொட்டுக் கூடப் பார்க்க முடியாது!

## சென்னை, பெரியார் திடலில் நடைபெற்ற விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை!

சென்னை, டிச. 4 –

**சென்னை, பெரியார் திடலில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் வீரமணி அவர்களின் 93–வது பிறந்த நாள் விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்தி உரையாற்றினார். இதைத் தொடர்ந்து, திருச்சியில் அமைய வுள்ள பெரியார் உலகத்துக்கு, ரூ.10 லட்சத்தை நன்கொடையாக வழங்கினார்.**

**அப்போது கழக இளைஞர் அணி சார்பில் அவர், "சுயமரியாதை உணர்வுள்ள கோடான கோடி, பெரியாரின் கருப்புச் சட்டைப் பட்டாளமும், கலைஞரின் உடன்பிறப்புகளும் இருக்கிற வரை பாசிஸ்டுகளால் தமிழ்நாட்டைத் தொட்டுக் கூடப் பார்க்க முடியாது. ஆகவே, 2026 சட்டமன்றத் தேர்தலில் பாசிஸ்ட்டுகளையும், அவர்களின் அடிமைகளையும் வீழ்த்த நாம் ஓரணியில் நின்று செயல்பட வேண்டும்" என்று குறிப்பிட்டார்.**

**விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

திராவிட இயக்கத்தின் திசைக்காட்டி ஆசிரியர் அய்யா அவர்களின் பிறந்தநாள் நிகழ்ச்சியில் உங்களுடன் சேர்ந்து நானும் இங்கு வருகை தந்து, ஆசிரியர் அவர்களின் வாழ்த்துகளைப் பெறுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

சரியாக ஐந்து நாட்களுக்கு முன்பு இதே பெரியார் திடலுக்கு எனது பிறந்தநாள் நிகழ்ச்சிக்காக வந்திருந்தேன். இன்றைக்கு, அய்யாவின் பிறந்த நாளுக்காக வருகை தந்துள்ளேன். இந்த பெரியார் திடல் என்பது என் பொதுவாழ்வில் மறக்க முடியாத பல பெருமைகளை, பல நிகழ்ச்சிகளை நடத்தி இருக்கக்கூடிய திடல்.

### தி.மு.க 75 பவள விழா

இந்த பெரியார் திடலுக்கும் எனக்குமான உறவு சம்பந்தம், 2019-ஆம் ஆண்டு, அரசியல் பொதுவாழ்விற்கு வந்த பிறகு நான் கலந்து கொண்ட முதல் புத்தக வெளியீட்டு விழா நிகழ்ச்சி இங்குதான் நடந்தது. அதன் பிறகு ஏராளமான முறை வந்திருக்கிறேன். சென்ற மாதம் இளைஞர் அணியின் சார்பாக தி.மு.க 75 பவள விழாவை முன்னிட்டு, அறிவுத் திருவிழாவை வள்ளுவர் கோட்டத்தில் நடத்தியிருந்தோம். அப்போது ஆசிரியர் அய்யா வெளிநாட்டில் இருந்தார். அவர் சென்னைக்கு வந்த பிறகு அவரை உடனடியாகச் சந்திக்க வேண்டும். இளைஞர் அணியின் சார்பாக காலத்தின் நிறம்-கருப்பு சிவப்பு என்ற புத்தகத்தை வெளியிட்டு இருந்தோம். அதை அய்யாவிடத்தில் கொடுத்துவிட்டு, அவருடைய வாழ்த்துகளைப் பெறுவதற்காக நானும் இளைஞர் அணி சகோதரர்களும் வருகை தந்திருந்தோம்.

அதற்கு 10 நாட்களுக்கு முன்பு முரசொலியில் பாசறைப் பக்கத்தைத் தொடர்ந்து ஆசிரியர் அய்யா படித்து வருகிறார். அதற்காக எங்களுடைய குழுவைப் பாராட்ட வேண்டும் என்று அவர் ஆசைப்பட்டார் என்று தெரிந்தவுடன், இதைவிடப் பெரிய பாராட்டு பாசறைப் பக்கத்திற்கு எங்கிருந்து கிடைக்கப் போகிறது என்று நானும் இளைஞர் அணி துணைச் செயலாளர்களும் அந்தப் பாசறைக் குழுவோடு சேர்ந்து வந்து, ஆசிரியரைச் சந்தித்து, அவருடைய வாழ்த்தைப் பெற்றுவிட்டுச் சென்றேன்.

இந்தக் கொள்கை உறவின் தொடர்ச்சியாகத் தான், இன்றைக்கு அந்த உரிமையோடு இந்த மேடையில் உங்கள் முன்பு நின்று கொண்டிருக்கிறேன். இந்த மேடையில் துணை முதலமைச்சராக அல்ல. கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளராக மட்டுமல்ல, அதைவிட நான் பெருமையாகக் கருதுவது தந்தை பெரியாரின் கொள்கைப் பேரனாக இன்றைக்கு நான் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ளேன்.

### தாத்தா பேரன் உறவு

திராவிடர் கழகம் என்பது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தாய் வீடு என்று கலைஞர் அவர்கள் அடிக்கடி குறிப்பிட்டுச் சொல்வார். எல்லோருமே தாய் வீட்டிற்குச் செல்லும்போது மகிழ்ச்சியாகச் செல்வோம். குறிப்பாக, தாத்தா வீட்டிற்குச் செல்லும்போது இன்னும் கூடுதல் மகிழ்ச்சியோடு செல்வோம். அப்படி என்னுடைய தாத்தா வீட்டிற்கு, ஒரு பேரனாக வந்திருக்கிறேன்.

இங்கே நம்முடைய ஆசிரியர் அவர்கள் 93-வது பிறந்தநாளைக் கொண்டாட, இன்றைக்குக் கருஞ்சட்டை வீரர்கள் தமிழ்நாட்டிலிருந்து பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்திருக்கிறீர்கள். நானும் கருப்புச் சட்டையோடு வருகை தந்திருக்கிறேன். சிலருக்கு வியப்பாக இருக்கலாம், சிலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம், சிலருக்கு சந்தேகமும் இருக்கலாம். நிச்சயமாக விரும்பித்தான் அணிந்து வந்திருக்கிறேன்.

1979-ஆம் ஆண்டு கலைஞர் அவர்களின் கோபாலபுரம் வீட்டின் முன்பு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கையில் இரண்டு வயதுக் குழந்தையாக நான். அது இந்தித் திணிப்பதை எதிர்த்து நடந்த போராட்டத்தில் கருப்புச் சட்டை அணிந்து கொண்டு நான் பங்கேற்றேன். மூன்று பேருமே கருப்புச் சட்டை அணிந்திருப்போம். கலைஞர் அவர்கள், கழகத் தலைவர், நான் மூன்று பேருமே கருப்புச் சட்டை அணிந்திருப்போம். எனவே, கலைஞர் வழியில், தலைவர் வழியில் மூன்றாம் தலைமுறை பெரியாரிஸ்ட் என்று சொல்லிக் கொள்வதில் நான் பெருமையடைகிறேன்.

இங்கே கருப்புச் சட்டை அணிந்து வந்திருக்கக்கூடிய நம்முடைய தோழர்கள் உங்களையெல்லாம் பார்க்கும்போது, எனக்கு மகிழ்ச்சியாகவும் இருக்கும், அதே நேரத்தில் மிகுந்த வியப்பாகவும் இருக்கும். ஏனென்றால் நேற்றைக்கு இயக்கத்தை ஆரம்பித்து, இன்றைக்கே முதலமைச்சராக ஆகவேண்டும் என்று, பலர் அந்த ஆசையில் வருகிறார்கள். ஆனால், இங்கே ஒரு கவுன்சிலர் பதவிகூட எனக்குத் தேவையில்லை. பஞ்சாயத்துத் தலைவர் பதவி கூட எனக்குத் தேவையில்லை. எங்களுக்குக் கொள்கை முக்கியம். சமுதாயத் தொண்டு மட்டுமே முக்கியம் என்று பெரியார் காலத்தில் இருந்து செய்து வருகிறீர்கள்.

### துறவிகளைவிடத் தூயவர்கள்

அதனால்தான் என்னுடைய தொண்டர்கள் துறவிகளைவிடத் தூயவர்கள் என்று தந்தை பெரியார் அவர்கள் அடிக்கடி சொல்வார். ஆனால், அந்தத் துறவிக்குகூட ஒரு ஆசை இருக்கும். நாம் இறந்த பிறகு சொர்க்கத்திற்குப் போவோம் என்ற ஆசை இருக்கும். ஆனால், அந்தச் சொர்க்கத்தில் கூட நம்பிக்கை இல்லாதவர்கள்தான், இங்கே வந்திருக்கக்கூடிய கருஞ்சட்டை வீரர்களாகிய நீங்கள். ஆசைமட்டும் இல்லை என்று கிடையாது. அதே நேரத்தில் கட்டுப்பாடோடும், கடமை உணர்வோடும் வந்திருக்கிறீர்கள் என்றால், உங்களையெல்லாம் வழி நடத்துகின்ற ஆசிரியர் அய்யாவிற்குத்தான் அந்தப் பெருமை சென்று சேரும்.

இன்றைக்குச் சுயமரியாதை இயக்கம் நூற்றாண்டைக் கடந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் பவளவிழாவைக் கொண்டாடி இருக்கிறது. இந்தச் சூழலில் தன்னுடைய 83 ஆண்டுகாலப் பொதுவாழ்க்கை மூலமாக திராவிட இயக்கத்தின் நேரடி வரலாற்றுச் சாட்சியாக ஆசிரியர் அய்யா இங்கே உட்கார்ந்திருக்கிறார்.

இன்றைக்குப் பெரியாரின் கொள்கைகள் நாடு முழுவதும், வெளிநாடுகள் உட்பட பரவியிருக்கின்றன. பெரியாரை இன்றைக்கு உலகமே கொண்டாடிக்கொண்டு இருக்கிறது. குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்றால் இன்றைக்கு இருக்கக்கூடிய தலைமுறையினர் Gen Z Kids அவர்களும் இன்றைக்குப் பெரியாரின் கொள்கைகளைப் படிக்க, ஏற்றுக்கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். அதற்கெல்லாம் காரணம் ஆசிரியர் அய்யா அவர்களின் உழைப்பு என்று சொன்னால் அதில் மாற்றுக் கருத்து இல்லை.

ஆசிரியர் அய்யா அவர்கள் தன்னுடைய 10 வயதில் இருந்து, மேடைகளில் பேசத் தொடங்கிவிட்டார். 10 வயதில் பெரியாரின் கொள்கைகளைப் பேசத் தொடங்கிய ஆசிரியர் அய்யா அவர்கள் இன்றைக்கு 93 வயதிலும் அதே கொள்கைகளைப் பேசிக்கொண்டிருக்கிறார்.

### முரசொலி – விடுதலை

இன்றைக்குத் தந்தை பெரியார் அவர்கள் இருந்திருந்தால் நம்மையெல்லாம் எப்படி வழி நடத்துவாரோ, அந்த இடத்தில் ஆசிரியர் அய்யா அவர்கள் இருந்து நம்மையெல்லாம் வழிநடத்திக்கொண்டிருக்கிறார். குறிப்பாக, தமிழ்நாட்டிற்கு எந்த நேரத்தில் எந்த ஆபத்து வந்தாலும், அது இந்தித் திணிப்பாக இருக்கட்டும், நீட் (NEET), தொகுதி மறுவரையறையாக இருக்கட்டும், EWS (பொருளாதாரத்தில் பின்தங்கியோருக்கு இட ஒதுக்கீடு) பிரச்சினையாக இருக்கட்டும். இப்படி எந்த ஆபத்து வந்தாலும், நமக்கெல்லாம் அதை முன்கூட்டியே தெரிவிக்கின்ற ஒரு எச்சரிக்கை மணியாக நம்முடைய ஆசிரியர் அய்யா அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார். அதனால்தான் ஒவ்வொரு விஷயத்திலும், ஆசிரியர் அய்யா அவர்கள் என்ன சொல்லி இருக்கிறார், என்ன முடிவு எடுக்கிறார் என்பதில் தலைவராக இருக்கட்டும், திராவிட முன்னேற்றக் கழகமாக இருக்கட்டும் எதிலும் தெளிவாக இருப்போம்.

இன்றைக்குக் காலையில் கூட பல நாட்களாகத் தலைவர் கலைஞர் முரசொலி படித்துவிட்டாயா என்று செக் செய்வார். முரசொலி படிப்பதற்கு முன்பு நான் விடுதலை படித்துவிட்டுத்தான் முரசொலியும் படிக்க வேண்டி உள்ளது. அந்தக் காலச் சூழ்நிலையில் நாம் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறோம்.

இளம் வயதில் நிறைய பேர், அந்த வேகத்தில் கொள்கைகளை வேகமாகப் பேசுவோம். அந்த வயதில் பின்பற்ற முடியாத சூழ்நிலை ஏற்படும். ஆனால், நம்முடைய ஆசிரியர் அவர்கள் பேசுவது மட்டுமல்லாமல், அந்தக் கொள்கையில் இன்றுவரைக்கும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

அதற்கு ஒரு சின்ன உதாரணத்தை இங்கே நான் குறிப்பிட விரும்புகின்றேன். ஆசிரியர் அய்யா அவர்கள் படிக்கும்போது சட்டப்படிப்பு படித்தார். அப்போது தேர்வுக்குக் கொடுக்கின்ற நுழைவுச் சீட்டை வேண்டும் என்றே ராகு காலத்தில் வாங்குகின்ற பழக்கத்தைக் கொண்டிருந்தார். எல்லோரும் கேட்டார்கள், 'ஏன்பா ராகு காலத்தில் வாங்குகிறாய்' என்று கேட்டதற்கு ஆசிரியர் அவர்கள் சொன்னார், மற்றவர்கள் கெட்ட நேரம் என்று நினைக்கும் இந்த நேரத்தில் நுழைவுச் சீட்டை நாம் வாங்கினால், கூட்டம் இருக்காது. மிகவும் சுலபமாக வாங்கிவிட்டு வந்திடலாம் என்று அவர்களுக்கெல்லாம் பதில் சொன்னார். பகுத்தறிவுவாதியாக இருப்பதில் நமக்கு இப்படிப் பல்வேறு நன்மைகள் தானாகவே அமைந்துவிடுகின்றன.

நான் வள்ளுவர் கோட்டத்தைத் தேர்ந்தெடுத்ததுமே, பலபேர் முட்டுக்கட்டை போட்டார்கள். அதை யோசித்துச் செய்யுங்கள் என்று, அந்த ஒரு காரணத்திற்காகவே நிச்சயம் நான் வள்ளுவர் கோட்டத்தில்தான் அறிவுத் திருவிழாவை நடத்துவேன் என்று நடத்திக்காட்டி இன்றைக்கு அது மிகப் பெரிய வெற்றி விழாவாகவே அது அமைந்திருக்கிறது.

அதேபோல நம்முடைய ஆசிரியர் அவர்கள் பேச்சுத்திறமை, எழுத்துத்திறமை மட்டுமல்லாமல் தன்னுடைய செயல்களாலும் தந்தை பெரியாருடைய நம்பிக்கையைப் பெற்றவர். அதனால்தான் 30 வயதில் ஆசிரியர் அய்யா அவர்களை விடுதலை பத்திரிகையின் ஆசிரியராகத் தந்தை பெரியார் அவர்கள் நியமித்தார். அன்றிலிருந்து இன்றுவரை 63 ஆண்டுகள் விடுதலையின் ஆசிரியராக அய்யா அவர்கள் அதைச் சிறப்பாக இன்றைக்கு நடத்திக் கொண்டிருக்கிறார்.

உலக அளவில் ஒரு பத்திரிகைக்கு 63 ஆண்டுகள் தொடர்ந்து ஆசிரியராக இருந்த பெருமை உலகத்திலேயே நம்முடைய ஆசிரியர் அய்யா அவர்களுக்கு மட்டும்தான் அந்தப் பெருமை. சமீபத்தில், காலத்தின் நிறம் கருப்பு-சிவப்பு என்ற புத்தகத்தை அய்யாவிடம் கொடுத்தோம். அதில் பார்த்தீர்கள் என்றால் முதல் பேட்டி அய்யா அவர்களுடையதுதான். அந்தப் பேட்டியில் இளைஞர் அணியின் பணிகளையெல்லாம் அவர் பாராட்டி இருக்கிறார். ஒரு ஆசிரியரிடம் நல்ல மார்க் வாங்கிப் பாராட்டுப் பெற்றது போன்ற உணர்வு எங்கள் இளைஞர் அணிக்கு அந்த நேரத்தில் கிடைத்தது.

### அண்ணா சொன்ன வார்த்தை

பெரியாரும், அண்ணாவும் பேசிக் கொள்ளாத சமயத்தில் விடுதலைப் பத்திரிகையில் தி.மு.க.வைப் பற்றி எழுத மாட்டார்கள். கண்ணீர் துளிகள் என்று குறிப்பிட்டுத்தான் விடுதலைப் பத்திரிகையில் வரும். பெரியாரும், அண்ணாவும், கலைஞரும் பேச ஆரம்பித்த பிறகு விடுதலையில் தி.மு.க என்று மாற்றி எழுத ஆரம்பித்தார்கள். அதற்குக் காரணமாக இருந்தவர் நம்முடைய ஆசிரியர் அய்யா அவர்கள்தான். அப்போது கண்ணீர் துளிகளாக இருந்த தி.மு.க இப்போது உங்களுடைய கண்களில் ஆனந்தக் கண்ணீரை வரவைக்கின்ற வகையில் பெரியார் வழியில் நம்முடைய தலைவர் அவர்கள், முதலமைச்சர் அவர்கள் ஆட்சி செய்து கொண்டிருக்கிறார்.

தி.மு.க முதன் முதலில் ஆட்சிக்கு வந்ததும் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன வார்த்தை, ``இந்த அரசு தந்தை பெரியார் அவர்களுக்குக் காணிக்கை'' என்றுதான் சொன்னார். அதேபோல் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சமீபத்தில் செங்கல்பட்டில் நடந்த சுயமரியாதை இயக்க நூற்றாண்டு மாநாட்டில் பேசும்போது குறிப்பிட்டார், ``தி.மு.க செல்லும் பாதையை எப்போதுமே தீர்மானிப்பது பெரியார் திடல் தான்'' என்று பேசினார். ஆகவே பெரியாருடைய கொள்கைப் பாதையில்தான் தி.மு.க எப்போதும் செல்லும், அதை யாராலும் நிச்சயம் மாற்ற முடியாது.

ஆசிரியர் அய்யா அவர்களுக்கு இன்றைக்கு 93-வது பிறந்தநாள். ஆனால் ஆசிரியர் அய்யா தன்னுடைய 74-வது பிறந்தநாள் வரைக்கும் பிறந்தநாளைக் கொண்டாடியதே கிடையாது. அவருக்கு 75-வது பவள விழா பிறந்த நாளைக் கொண்டாட நினைக்கும்போது, அனைவரும் அவரிடம் சென்று கேட்டபோது முடியாது என்று சொல்லிவிட்டார். அந்தக் விழா குழுவினர் கலைஞர் அவர்களிடம் சென்று, ஆசிரியர் அவர்களின் பவள விழாவைக் கொண்டாட வேண்டும் என்று சொன்னார்கள்.

### நெருங்கிய தொடர்பு உண்டு

அப்போது கலைஞர் அவர்கள், "நான் சொன்னால் மறுக்க மாட்டார்" என்று சொன்னார். ``அவருடைய 75 ஆவது பிறந்தநாள் என்னுடைய தலைமையில் நடக்க வேண்டும்" என்று சொல்லுங்கள்'' என்று கூறினார். அதன்பிறகு தான் பிறந்தநாள் நிகழ்ச்சிகளில் ஆசிரியர் அய்யா கலந்துகொள்ள ஆரம்பித்தார். அப்படிப் பார்த்தால் இப்போது நடக்கின்ற இந்த பிறந்தநாள் நிகழ்ச்சிக்கும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு உண்டு. அவர்தான் இந்த நிகழ்ச்சிக்கும் காரணம். அந்த அளவுக்கு ஆசிரியர் அய்யா மீது தனிப்பாசம், தனி மரியாதை. அதனால்தான் ஆசிரியர் அவர்களைக் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டுப் பேசும்போது சொல்கிறார். ``அவர் வெறும் கீ. வீரமணி கிடையாது, என்னுடைய கீயாகவும் அவர்தான் எப்போதுமே இருந்து கொண்டிருக்கிறார்'' என்று கலைஞர் அவர்கள் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்.

தான் ஏற்றுக்கொண்ட கொள்கைக்காகப் பல தியாகங்களைச் செய்தவர்தான் ஆசிரியர் அவர்கள். குறிப்பாக மிசா சட்டத்தில் நம்முடைய தலைவர் முதலமைச்சர் அவர்கள் கைது செய்யப்பட்டார். ஆனால் நம்முடைய முதலமைச்சருக்கு முன்னதாகவே கைது செய்யப்பட்டு சிறையில் அடைபட்டவர்தான் ஆசிரியர் அய்யா அவர்கள்.

நம்முடைய முதலமைச்சர் அவர்களைக் கைது செய்து சிறையில் தள்ளும்போது அதே அறையிலிருந்து அவரைத் தாங்கிப் பிடித்துக் கொண்ட கரங்கள்தான் ஆசிரியர் அய்யாவின் கரங்கள். தி.மு.க ஒரு அரசியல் கட்சி, அதனால் தான், மிசா நேரத்தில், தி.மு.கழகத்தின் தலைவர்களை, நிர்வாகிகளைத் தேடித் தேடிக் கைது செய்தார்கள். ஆனால், திராவிடர் கழகம் என்பது ஒரு சமுதாய இயக்கம். தி.மு.க-வை ஆதரித்த ஒரே காரணத்துக்காக திராவிடர் கழக நிர்வாகிகளையும் சேர்த்துக் கைது செய்தார்கள். அப்படிதான் ஆசிரியர் அய்யா அவர்களும் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த நேரத்தில், அன்னை மணியம்மையார் அவர்களின் வீரத்தைப் பற்றி நான் இங்கே குறிப்பிட்டப் பேசவேண்டும். ஒன்றிய அரசில் அன்றைக்கு இருந்தவர்கள், இப்போதுபோல் பிளாக்மெயில் செய்து கொண்டிருந்தார்கள்.

"தி.மு.க.வுக்கும், தி.க.வுக்கும் எந்த ஒட்டுமில்லை உறவுமில்லை என்று ஒரு பேப்பரில் எழுதித் தாருங்கள், தி.க.காரர்களை விடுதலை பண்ணிவிடுகிறோம்" என்று மணியம்மையாரிடம் சொன்னார்கள். ஆனால், அன்னை மணியம்மையார் துணிச்சலாகப் பதில் சொன்னார், "தி.மு.க - தி.க. என்ற உறவு தந்தை பெரியார் உருவாக்கிய உறவு. இது கொள்கை அடிப்படையிலான உறவு. அதனால், எத்தனை ஆண்டுகள் ஆனாலும் எங்க இயக்கத்துக்காரர்கள் சிறையிலேயே இருக்கட்டும். நீங்கள் சொல்கின்ற மாதிரி எல்லாம் எங்களால் எழுதி கொடுக்க முடியாது" என்று மணியம்மையார் அவர்கள் சொன்னார்கள்.

### எங்களுடைய கடமை

``செத்தாலும் சாகட்டும். ஆனால், தி.மு.க-வுடன் உறவு இல்லை என்று என்னால் சொல்லவே முடியாது'' என்று சொன்ன வீரப்பெண்மணிதான் அன்னை மணியம்மையார் அவர்கள். இவ்வளவு தாக்குதல்கள், சிறைவாசங்கள், ஒடுக்குமுறைகள் எல்லாவற்றையும் நமக்காகத் தாங்கிக் கொண்ட ஆசிரியர் அவர்களுக்கு நாங்கள் எப்போதுமே துணையாக நிற்போம், நிற்க வேண்டும் அது எங்களுடைய கடமை. ஆனால், ஆசிரியர் அவர்களைப் பார்க்கும்போது அவருக்கு 93 வயது என்று யாராலும் நம்ப முடியாது. 39 வயது என்று சொன்னால், நம்பலாம். 93 வயதிலும் இன்றைக்கும் எங்களை விடச் சுறுசுறுப்போடு, இன்னும் சொல்லப்போனால் எங்களைவிடச் சின்ன வயதுப் பையன் போல செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.

தமிழ்நாடு முழுவதும் சூறாவளிச் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கிறார். தொடர்ந்து விடுதலைப் பத்திரிகையில் பார்க்கின்றேன். கடந்த ஒரு வாரத்தில் மட்டும் பொள்ளாச்சி, கோபி, சென்னை, திருச்சி, மன்னார்குடி, பட்டுக்கோட்டை, புதுக்கோட்டை, காரைக்குடி என்று ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு ஊரில் இருந்து தன் பிரச்சாரத்தைச் செய்து கொண்டிருக்கிறார்.

பெரியார் அவர்களின் கருத்துகளைப் பரப்ப வேண்டும் என்ற உந்துதல் இருப்பதால்தான் ஆசிரியர் அவர்கள் இந்த வயதிலும் அவரின் பிரச்சாரத்தை மேற்கொள்கிறார். தந்தை பெரியார் அவர்களின் வயதைப் பற்றிச் சொல்லும்போது, கலைஞர் அவர்கள் ஒருமுறை சொன்னார். ``தமிழ்ச் சமுதாயம் ஒருபடி முன்னேறினால், பெரியாரின் வயதில் ஒன்று குறையும்'' என்று சொன்னார்.

நான் கலைஞர் இடத்தில் அதை இரவல் வாங்கி அதையே, ஆசிரியர் அவர்களுக்கும் குறிப்பிட விரும்புகிறேன். ``தமிழர்கள் ஒருபடி முன்னேறினால், ஆசிரியர் அவர்களின் வயதில் ஒன்று நிச்சயமாகக் குறையும்''. அதற்காக, உற்சாகத்தோடு பணியாற்றிக் கொண்டிருக்கும் உங்களை வழிகாட்டியாகக் கொண்டு நாங்களும் செயல்படத் தயாராக இருக்கிறோம். இறுதியாக, இந்த பெரியார் திடலைப் பற்றி கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதை இங்கு குறிப்பிட்டு முடிக்க விரும்புகிறேன்.

கீரிக்கும் பாம்புக்கும் சண்டை வரும்போது, பாம்பைக் கொன்று கீரிதான் வெற்றிபெறும். ஆனால், பாம்பிடம் கடிக்கப்பட்ட அந்தக் கீரி, அந்தப் பாம்பின் விஷத்தைப் போக்கிக்கொள்ள, அதற்கு மட்டுமே தெரிந்த ஒரு மூலிகையில் விழுந்து புரளும். அப்படி, பொது வாழ்வில் பல பாம்புகளிடம் கடிபடும் நான், பெரியார் திடலுக்கு வந்து பெரியார் எனும் மூலிகையைத் தடவினால் அந்த விஷமெல்லாம் முறிந்துபோகும் என்று கலைஞர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள்.

கலைஞர் அவர்களை மட்டுமல்ல, இன்றைக்கும் நம் இயக்கங்களை, நம் தலைவரை, என்னையும் கூட நிறைய பாசிசப் பாம்புகள் சீண்டிக் கொண்டே இருக்கின்றன. ஆகவே, எங்களுக்கும் பெரியார் திடலின் மூலிகை கண்டிப்பாகத் தேவைப்படும். எனவே, நாங்களும் அடிக்கடி பெரியார் திடலுக்கு வரவேண்டிய கட்டாயம் எங்களுக்கும் ஏற்படும். இன்றைய அரசியல் சூழ்நிலையில், திராவிட இயக்கத்துக்குச் சமமான போட்டியே இல்லை, வெறும் சூழ்ச்சிகள் மட்டும்தான் இருக்கின்றன என்று ஆசிரியர் அவர்கள் சமீபத்தில் சொல்லி இருக்கிறார்.

மும்மொழிக் கொள்கை, தொகுதி மறுவரையறை, நீட், நிதிப் பகிர்வில் பாரபட்சம் என்று பாசிஸ்ட்டுகள் எவ்வளவு சூழ்ச்சிகளைச் செய்தாலும், அது எல்லாம் ஒரு போதும் தமிழ்நாட்டில் எடுபடாது. தமிழ்நாட்டில் அவர்களுக்குப் பழைய அடிமைகள், புதிய அடிமைகள் என எத்தனை அடிமைகள் வேண்டுமானாலும் கிடைக்கலாம். ஆனால், சுயமரியாதை உணர்வுள்ள கோடான கோடி, பெரியாரின் கருப்புச் சட்டைப் பட்டாளமும், கலைஞரின் உடன்பிறப்புகளும் இருக்கிற வரை அவர்களால் தமிழ்நாட்டைத் தொட்டுக் கூடப் பார்க்க முடியாது. ஆகவே, 2026 சட்டமன்றத் தேர்தலில் பாசிஸ்ட்டுகளையும், அவர்களின் அடிமைகளையும் வீழ்த்த நாம் ஓரணியில் நின்று செயல்பட வேண்டும். கழகத்தலைவர் அவர்கள் 200-க்கும் அதிகமான தொகுதிகளில் கழக அணி வெல்ல வேண்டும் என்று இலக்கு நிர்ணயித்துள்ளார்கள். அந்த இலக்கை அடைய, நாம் அனைவரும் சேர்ந்து அயராது உழைப்போம். அதற்கான உறுதியை, ஆசிரியர் அய்யாவின் பிறந்தநாளில் நாம் ஏற்போம் என்று கூறி, திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணியின் சார்பாக 10 லட்சம் ரூபாய் தொகையை உங்கள் முன்னிலையில் ஆசிரியரிடம் கொடுக்க விரும்புகிறேன்.

வாழ்க தந்தை பெரியார் - ஓங்கட்டும் ஆசிரியர் அய்யாவின் புகழ்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

ஆசிரியர் கீ.வீரமணி, மோகனா வீரமணி, அமைச்சர் சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர் பரந்தாமன், திராவிடர் கழகத்தின் துணைத் தலைவர் பூங்குன்றன், பொதுச் செயலாளர்கள் அன்புராஜ், துரை சந்திரசேகரன், துணைப் பொதுச் செயலாளர்கள் வழக்கறிஞர் பிரின்ஸ் இன்லாஸ், மதிவதனி, செயல் தலைவர் வழக்கறிஞர் வீர மர்தினி, மாநில ஒருங்கிணைப்பாளர்கள் தஞ்சை ஜெயக்குமார், ஒரத்தநாடு குணசேகரன், பன்னீர்செல்வம், ஜெயராமன், சென்னை பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் முனைவர் திருவாசகம், தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் பொதுச்செயலாளர் கு. இராமகிருஷ்ணன், கழகத்தின் மாவட்டக் கழகச் செயலாளர்கள் துரை சந்திரசேகரன், சாக் கோட்டை அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர் அசோக்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ரவிச்சந்திரன், பகுதி கழகச் செயலாளர் சுதாகர், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் வைகோ, திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப. வீரபாண்டியன், உள்பட பலரும் கலந்து கொண்டனர்.




சென்னை பெரியார் திடலில் நேற்று முன்தினம் (2.12.2025) நடைபெற்ற திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களின் 93 வது பிறந்த நாள் விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று, திருச்சி மாவட்டம் சிறுகனூரில் அமையவுள்ள பெரியார் உலகிற்கு திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணியின் சார்பில் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கி வாழ்த்தி உரையாற்றினார். உடன் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், திராவிடர் கழக துணைத்தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றன், பொதுச்செயலாளர்கள் முனைவர் துரை.சந்திரசேகரன், வீ.அன்புராஜ் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (02 12,2025) முகாம் அலுவலகத்தில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து, வாழ்த்துப் பெற்றார்.